## நம்மாழ்வார் அருளிச் செய்த
## திருவாய்மொழி
## ஒன்பதாம் பத்து

### மூன்றாம் திருவாய்மொழி - ஓராயிரம்
### எம்பெருமான் 'நீர் விரும்பியதை எல்லாம் தர வல்ல நாராயணனன்றோ நான்' என்று தன் பேருறவைக் காட்ட, ஆழ்வார் அவன் சீலத்தில் ஈடுபட்டுப் பேசுதல்

** ஓர் ஆயிரமாய் * உலகேழ் அளிக்கும் *
பேர் ஆயிரம் கொண்டதோர் * பீடு உடையன் **
கார் ஆயின * காள நன் மேனியினன் *
நாராயணன் * நங்கள் பிரான் அவனே 1

அவனே அகல் ஞாலம் * படைத்து இடந்தான் *
அவனே அஃது உண்டு உமிழ்ந்தான் * அளந்தான் **
அவனே அவனும் * அவனும் அவனும் *
அவனே மற்று எல்லாமும் * அறிந்தனமே 2

அறிந்தன வேத * அரும் பொருள் நூல்கள் *
அறிந்தன கொள்க * அரும் பொருள் ஆதல் **
அறிந்தனர் எல்லாம் * அரியை வணங்கி *
அறிந்தனர் * நோய்கள் அறுக்கும் மருந்தே 3

மருந்தே நங்கள் * போக மகிழ்ச்சிக்கு என்று *
பெருந்தேவர் குழாங்கள் * பிதற்றும் பிரான் **
கருந்தேவன் எம்மான் * கண்ணன் விண்ணுலகம் *
தரும் தேவனைச் * சோரேல் கண்டாய் மனமே! 4

மனமே! உன்னை * வல் வினையேன் இரந்து *
கனமே சொல்லினேன் * இது சோரேல் கண்டாய் **
புன மேவிய * பூந்தண் துழாய் அலங்கல் *
இனம் ஏதும் இலானை * அடைவதுமே 5

அடைவதும் * அணி ஆர் மலர் மங்கை தோள் *
மிடைவதும் * அசுரர்க்கு வெம்போர்களே **
கடைவதும் * கடலுள் அமுதம் * என் மனம்
உடைவதும் * அவற்கே ஒருங்காகவே 6

ஆகம் சேர் * நரசிங்கம் அதாகி * ஓர்
ஆகம் வள்ளுகிரால் * பிளந்தான் உறை **
மாக வைகுந்தம் * காண்பதற்கு * என் மனம்
ஏகம் எண்ணும் * இராப் பகல் இன்றியே 7

இன்றிப் போக * இரு வினையும் கெடுத்து *
ஒன்றி ஆக்கை புகாமை * உய்யக் கொள்வான் **
நின்ற வேங்கடம் * நீள் நிலத்து உள்ளது *
சென்று தேவர்கள் * கை தொழுவார்களே 8

தொழுது மா மலர் * நீர் சுடர் தூபம் கொண்டு *
எழுதும் என்னும் இது * மிகை ஆதலில் **
பழுதில் தொல் புகழ்ப் * பாம்பணைப் பள்ளியாய்! *
தழுவும் ஆறு அறியேன் * உன தாள்களே 9

தாள தாமரையான் * உனது உந்தியான் *
வாள் கொள் நீள் மழு ஆளி * உன் ஆகத்தான் **
ஆளர் ஆய்த் தொழுவாரும் * அமரர்கள் *
நாளும் என் புகழ்கோ * உன சீலமே? 10

** சீலம் எல்லை இலான் அடி மேல் * அணி
கோல நீள் * குருகூர்ச் சடகோபன் ** சொல்
மாலை ஆயிரத்துள் * இவை பத்தின் இன்
பாலர் * வைகுந்தம் ஏறுதல் பான்மையே 11

**ஆழ்வார் திருவடிகளே சரணம்**

---